செ.வெ.எண்:59 நாள்:29.07.2016

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சுகாதாரத்துறை அலுவலர்கள் தமிழக அரசின் சுகாதாரத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து அனைத்து மருத்துவ அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.07.2016) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

நமது மாவட்டத்தில் பொது சுகாதாரத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பணிகள் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் அனைத்து மருத்துவ அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஜுன் மாதத்திற்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேசிய காசநோய் தடுப்புத்திட்டப்பணிகள், மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம், மாவட்ட நலச்சங்கம், குடும்ப நல அறுவைசிகிச்சை தர நிர்ணய குழு, தனியார் மருத்துவமனை குடும்பநல அறுவை சிகிச்சை செய்திட அங்கீகாரம் வழங்குதல், டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித்திட்டம், நோயாளர் நலச்சங்கம், சீமாங் திட்டம், இரத்தவங்கி செயல்பாடு மற்றும் அனைத்து சுகாதாரத்திட்டங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது பரம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய இரத்த சேமிப்பு வங்கி பணிகளை விரைவாக மேற்கொள்ளவும், அரசு மருத்துவமனைகளுக்கு வரும் கர்ப்பிணி பெண்களுக்கு சிறப்பான சிகிச்சை அளித்து நல்ல முறையில் பிரசவம் பார்க்கவும், மேலும் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் தமிழகஅரசின் அனைத்து சுகாதாரத்திட்டங்களையும் மருத்துவ அலுவலர்கள் சிறப்பாக செயல்படுத்துவதுடன் அரசு மருத்துவமனைகளுக்கு பல்வேறு சிகிச்சைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சைகளை தொடர்ந்து வழங்கி மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.டி.பரிமளதேவி, இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) (பொ) மரு.சையது மொய்தீன், துணை இயக்குநர்கள் (புதுக்கோட்டை) மரு.பரணீதரன், மரு.கலைவாணி (அறந்தாங்கி) மற்றும் மருத்துவ அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**